குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.158/2024

அ.சா.5

2025-ம் ஆண்டு ஜீன் 27-ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 05-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வடிவேல் | தொழில் | |
| தந்தை பெயர் | சிவசுப்ரமணியன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.48 மணி,

Accused Meenkara Mariyappan @ Mariyappan produced on R/W. Advocate Mr.I.Jayakumar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் சேலம் மாவட்டம் கைரேகை பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.05.2024 ஆம் தேதி ஓமலூர் காவல் நிலையத்திலிருந்து ஒரு குற்ற வழக்கு சம்மந்தமாக என்னை அழைத்தார்கள். நான், சம்பவம் நடந்த இடத்தில் ஆய்வு செய்தபோது, மரக்கதவில் இருந்த இரண்டு கைரேகை பதிவுகளை எடுத்தேன். மேற்படி, சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட கைரேகை பதிவுகளை ஆய்வு செய்தபோது, ஒரு கைவிரல் ரேகை அந்த வீட்டில் குடியிருக்கும் பால்ராஜ் மகன் பிரகாஷ் என்பவரின் கைரேகையோடு ஒத்துப்போனது.

2. மற்றொரு கைரேகையை National Automated Fingerprint Identification System-ல் ஆய்வு செய்தபோது, அந்த கைரேகை பழைய குற்றவாளி மீன்கார மாரியப்பன் என்பவரின் இடது பெருவிரல் கைரேகையோடு ஒத்துப்போனது. இதுகுறித்து நான் ஆய்வாளரிடம் அறிக்கை வழங்கினேன். ( **சம்பவ இடத்தை பார்வையிட்டதற்கான அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், கைரேகை அடையாளம் குறித்து வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.) சென்னையில் உள்ள எங்கள் தலைமையகத்திற்கும் அறிக்கை அளித்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.06.27 17:36:46 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. நான் எம்.எஸ்.சி வேதியியல் படித்துள்ளேன். நான் 2019 ஆம் வருடம் காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன். சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட கைரேகைகள் எதிரியின் கைரேகையுடன் ஒத்துப்போவதை எவ்வாறு கண்டறிந்தேன் என்றால், ஒவ்வொரு வழக்கிலும் எதிரிகள் கைதாகும்போது, குற்றவாளிகள் என்று தண்டிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பும்போதும், எதிரிகளின் கைரேகைகளை சேகரித்து அதை National Automated Fingerprint Identification System–ல் பதிவேற்றுவோம்.

5. குற்றம் நடந்த சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட கைரேகைகளை அந்த வீட்டில் உள்ள நபர்களின் கைரேகைகளுடன் ஒப்பீடு செய்து பார்ப்போம். அவ்வாறு ஒத்துப்போகாத கைரேகைகளை National Automated Fingerprint Identification System–ல் ஒப்பிட்டு பார்ப்போம். அவ்வாறு இவ்வழக்கிலும் ஒப்பீடு செய்து பார்த்ததில் எதிரி மாரியப்பன் என்பவரது கைரேகையுடன் ஒற்றுப்போனது. அதனால் மேற்படி அறிக்கை வழங்கினேன்.

6. சம்பவ இடத்திலிருந்து, எடுக்கப்பட்ட எதிரியின் கைரேகையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்பதால், நான் வழங்கியுள்ள சான்றை ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. எதிரி மீன்கார மாரியப்பன் 27.07.2024 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் இருக்கும் சி.சி.எண்.153/2017 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை நிறைவேற்றப்பட்டு, பெங்களூரில் வைத்து கைது செய்யப்பட்டார் என்றாலும், 07.05.2024 ஆம் எதிரி மீன்கார மாரியப்பன் தமிழ்நாட்டில் இல்லை என்றாலும் சரியல்ல.

8. ஓமலூர் காவல்நிலையத்தில் எதிரிக்கு எதிராக உள்ள வழக்குகளில் அவரது கைரேகை சேகரித்து வைக்கப்பட்டுள்ளது என்றாலும், நான், அதனுடன் ஒப்பீடு செய்து பார்க்காமல் செவ்வாய்பேட்டை மற்றும் சூரமங்கலம் காவல் நிலையங்களில் உள்ள குற்ற எண்களில் உள்ள கைரேகைகளுடன் ஒப்பீடு செய்து பார்ப்பது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.06.27 17:36:50 +0530

9. நான் இவ்வழக்கு சம்மந்தமாக வழங்கியுள்ள அறிக்கைக்கும், எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செவ்வாய்பேட்டை மற்றும் சூரமங்கலம் காவல் நிலையங்களில் உள்ள குற்ற எண்களில் உள்ள கைரேகைகளை எதிரி சி.சி.எண்.153/2017 வழக்கில் கைது செய்யப்பட்டு, 30.07.2024 ஆம் தேதி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட கைரேகைகளுடன் ஒப்பீடு செய்து, மேற்படி அறிக்கையை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மாலை 04.15 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.06.27 17:36:55 +0530